# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் – 637 001.

## குஷி இங்கிலீஷ் பயிற்சி

******

நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், இராசிபுரம் ரோட்டரி சங்கமும் இணைந்து 'குஷி இங்கிலீஷ்' என்ற கருத்தில் தன்னார்வ அடிப்படையிலான பயிற்சியை 08.02.2025 அன்று இராசிபுரம் ரோட்டரி நூற்றாண்டு அரங்கில் நடைபெற்றது.

குஷி இங்கிலீஷ் புத்தகம் வெயியீட்டு விழா மற்றும் பயிற்சிக்கு கருணாகர பன்னீர் செல்வம் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். முருகானந்தன் அவர்கள் தலைமை ஏற்க மருத்துவர் இராமகிருஷ்ணன் புத்தகத்தை வெளியிட நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்கள் பெற்றுக் கொண்டார். நிறுவன விரிவுரையாளர் த. சுமதி அவர்கள் குஷி இங்கிலீஷ் நூலைத் தயாரித்து பயிற்சியின் கருத்தாளராகவும் செயல்பட்டார்.

ஒருவருக்கு ஆங்கிலம் தெரிந்தால் அவரால் உலகோடு உறவாட முடியும். அனைத்து நாடுகளும் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் கருதி ஆங்கிலத்தை மாணவர்களுக்கு கற்பித்து வருகின்றன. ஆங்கிலம் அயல்மொழி என்பதால் கற்பித்தலில் உத்திகளுடனும், புதுமைகளுடனும், கற்றல் பொருட்களைப் பயனர் நட்புடனும் (user – friendly) உருவாக்க வேண்டும் என்றும், கற்பித்தல் – கற்றல் பொருட்களை மொழிக் கற்றல், வார்த்தை வளம், மொழிப் பயன்பாடு சார்ந்து உருவாக்கிடும்போது கற்பித்தலும் கற்றலும் எளிதாக நிகழும் என மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் செல்வம் கூறினார்.

நாமக்கல் ஒன்றியம், பெரியூர், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளிப் பார்வையின் போது கிடைக்கப்பெற்ற அனுபவங்களைப் பயன்படுத்தி 'குஷி இங்கிலீஷ்' நூல் உருவாக்கப்பட்டுள்ளது. வகுப்பறைகளில் தினமும் அடிக்கடி நிகழும் செய்திப் பரிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு 100 வாக்கியங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் நூலின் முதல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளது. இது ஆசிரியர்களும் பள்ளியில் ஆங்கிலத்தில் செய்திப் பரிமாற்றம் செய்ய உதவும் என நூலாசிரியர் சுமதி கூறினார்.

'100 வார்த்தை பயணம்' என்ற பகுதியில் வார்த்தைகளுக்கான படமும் விளக்கமும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் மொழி வளம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

நூலின் மூன்றாம் பகுதியில் பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், இரயில் நிலையம், விமான நிலையம், தொழிற்சாலை, ஹோட்டல், சிறுவர் பூங்கா, மருத்துவமனை, தபால் அலுவலகம் சார்ந்த கருப்பொருட்கள் கலர் படங்களாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்காண் கருத்துக்களுக்கான 10 வார்த்தைகள் படங்களுக்குக் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளன. படங்களில் இந்த வார்த்தைகளின் வரிசை எண்கள் குறிக்கப்பட்டுள்ளதால் வார்த்தைகளைப் படங்களாக படிப்போர் அறிய முடிவதால் வலது மூளை மற்றும் இடது மூளை அரைக் கோளங்கள் ஒரே சமயத்தில் கற்றலில் ஈடுபடுவதற்கு ஏதுவாக நூலில் மூன்றாம் பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

குஷி இங்கிலீஷ் பயிற்சியில் கவன ஈர்ப்பு செயல்பாடு, நண்பர்களை அறிமுகப்படுத்துதல், வினா விடை அறிதல், ஒரு வார்த்தைக்கு பல வாக்கியங்கள் அமைத்தல் செயல்பாடு, வார்த்தைகளுக்கிடையேயான உறவு முறை செயல்பாடு, உயிர்எழுத்து சவால், வார்த்தை அல்லாத உடல்மொழி செயல்பாடு, தமிழ் வார்த்தைக்கு இணையான ஆங்கில வார்த்தை அறிதல் செயல்பாடு, நா பிறழ் செயல்பாடு மற்றும் தொடர்ந்து பேசிக் கொண்டே இருத்தல் (டாக்கத்தான்) செயல்பாடு போன்ற செயல்பாடுகளில் கருத்தாளர் த. சுமதி அவர்கள் பயிற்சி அளித்தார்.

குஷி இங்கிலீஷ் நூல் சார்ந்த பயிற்சியில் நாமக்கல், சேலம், திருச்சி, ஈரோடு, தருமபுரி மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலிருந்து தன்னார்வத்துடன் 72 ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். பயிற்சியின் முடிவில் இராசிபுரம் ரோட்டரி சங்க செயலாளர் இராமசாமி நன்றியுரை கூறினார்.